RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023 - 2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-359 | 26 டிசம்பர் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அமித் ஷாவை கைது செய்ய வேண்டும் கே.வீ.தங்கபாலு வலியுறுத்தல்

சென்னை, டிச.26

சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளின் சார்பில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.வீ. தங்கபாலு தலைமையில், சென்னை துறைமுகம் பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அங்கிருந்து ஊர்வலமாக சென்று மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர் இதில், மாநிலத் துணைத் தலைவர்கள் சொர்ணா சேதுராமன், சென்னை மாவட்ட தலைவர்கள் சிவராஜசேகரன், எம். எஸ். திரவியம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் உடன் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் கே.வீ. தங்கபாலு கூறியதாவது:மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை பதவி நீக்கம் செய்யக்கோரி குடியரசு தலைவருக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் மனு அளித்திருக்கிறோம். அம்பேத்கர் பற்றி தவறாகக் குறை கூறியதைக் கண்டித்து இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தையும், ஊர்வலத்தையும் நடத்தியுள்ளோம்.

பிரதமர் மோடி உண்மையாக அம்பேத்கர் எழுதிய அரசியல் அமைப்பு சட்டத்தை மதிப்பவராக இருந்தால், சட்டத்தின் ஆட்சி நடப்பதாக இருந்தால் உடனடியாக அமித் ஷாவை கைது செய்ய வேண்டும். அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும். குடியரசுத் தலைவர் உடனடியாக இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சி இன்று (நேற்று) கோரிக்கை மனு அளித்துள்ளது. எங்களது கோரிக்கையை நிறைவேற்ற இன்னும் பல போராட்டங்களை நடத்துவோம். இவ்வாறு தங்கபாலு கூறினார்.

## “நிதி உதவி வழங்க தகவல்களை திரட்டும் அதிகாரம் அரசியல் கட்சிக்கு கிடையாது” ஆம் ஆத்மிக்கு டெல்லி அரசு எதிர்ப்பு

புதுடெல்லி, டிச.26

ஆம் ஆத்மியின் நலதிட்ட அறிவிப்புக்கு எதிராக டெல்லி அரசின் குழந்தைகள் மற்றும் பெண்கள் வளர்ச்சித்துறை புதன்கிழமை அறிக்கை வெளியிட்டுள்ளது. ‘முதல்வரின் பெண்களுக்கான மரியாதை திட்டம்‘ (முக்கிய மந்திரி மகிளா சம்மான் யோஜனா) என்ற பெயரில் தகவல்களை சேகரிப்பது மோசடி என்றும், இவ்வாறு தகவல்களை திரட்ட தனிநபர்களுக்கோ, அரசியல் கட்சிக்கோ அதிகாரம் இல்லை என்றும் அது தெரிவித்துள்ளது.



இதுகுறித்து டெல்லி அரசுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், “‘முதல்வரின் பெண்களுக்கான மரியாதை திட்டம்‘ என்ற பெயரில் டெல்லி பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.2,100 வழங்குவதாக ஒரு அரசியல் கட்சி அறிவித்துள்ளதாக ஊடக செய்திகளின் வழியாக அறிந்தோம். டெல்லி அரசால் அத்தகைய திட்டம் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

அத்தகைய திட்டம் எதுவும் இல்லாததால், இல்லாத அந்த திட்டத்துக்கான படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களை ஏற்றுகொள்வது பற்றி கேள்வி எழுப்ப முடியாது என்று வலியுறுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மோசடி செய்யப்படுகிறது. ‘முதல்வரின் பெண்களுக்கான மரியாதை திட்டம்‘ என்ற பெயரில் தகவல்களை திரட்ட தனிநபர்களுக்கோ, அரசியல் கட்சிக்கோ அதிகாரம் இல்லை” என்று தெரிவித்துள்ளது.

வரும் டெல்லி பேரவைத் தேர்தலை முன்னிட்டு ஆம் ஆத்மி அரசு அறிவித்துள்ள இரண்டு நலத்திட்டங்களுக்கான விண்ணப்பதாரர்களை வீடு வீடாக சென்று பதிவுசெய்யும் இயக்கத்தை ஆம் ஆத்மி கட்சி தொடங்கிய மறுநாள் இந்த அறிக்கை வந்துள்ளது. இந்த விவகாரம் டெல்லி அரசியலில் புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முன்னாள் முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவால் தனது எக்ஸ் பக்கத்தில், “மகிளா சம்மன் யோஜனா மற்றும் சஞ்சீவினி யோசனா ஆகிய திட்டங்களால் அவர்கள் கலவரமடைந்துள்ளனர். அடுத்த சில நாட்களில் அதிஷியை அவர்கள் போலி வழக்கு போட்டு கைது செய்ய திட்டமிட்டுள்ளனர். அதற்கு முன்பு ஆம் ஆத்மியின் மூத்த தலைவர்களை சோதனைக்குட்படுத்துவார்கள்” என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு பாஜகவும் பதிலடி கொடுத்துள்ளது. அக்கட்சியின் மஞ்சிந்தர் சிங் சிர்சா கூறுகையில், “அரவிந்த் கேஜ்ரிவால் ஒரு மோசடியாளர். அவர் விண்ணப்பங்களை நிரப்பிப் பெற்றுக் கொண்டிருக்கும் போது, அவரது அரசுத்துறை (டெல்லி பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை) ரூ.2,100 வழங்கும் திட்டம் எதுவும் இல்லை என்று தெளிவு படுத்தியுள்ளது. இதற்காக படிவங்களைப் பூர்த்தி செய்து வாங்கும் தனிநபர்கள் சட்டவிரோதமாக தரவுகளை சேகரிக்கிறார்கள்” என்று தெரிவித்துள்ளார்.

## டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி ஜன. 3ல் வைகோ தலைமையில் மதிமுக ஆர்ப்பாட்டம்

சென்னை, டிச.26

டங்ஸ்டன் கனிம சுரங்க திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி ஜன. 3ம் தேதி மேலூரில் தனது தலைமையில் மதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் கனிமம் மற்றும் சுரங்கம் அமைச்சகம் கனிம வளங்களை எடுப்பதற்காக நாடு தழுவிய அளவில் ஏலம் விட்டிருந்தது.

கடந்த நவம்பர் 7 ஆம் தேதி கனிமங்கள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் 7ஆவது ஏலம் நடத்தப்பட்டது. அதில் மேலூர், நாயக்கர்பட்டியில் உள்ள டங்ஸ்டன் (Tungsten) கனிமத்தைத் தோண்டி எடுப்பதற்கு 5, 000 ஏக்கர் பரப்பளவில் சுரங்கம் அமைப்பதற்கான அனுமதியை வேதாந்தாவின் துணை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஜிங்க் (Hindustan Zinc) நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. இதன்படி மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் அரிட்டாபட்டி, வல்லாளப்பட்டி, நாயக்கர்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் டங்ஸ்டன் என்னும் கனிமவளங்கள் வெட்டி எடுப்பதற்கு வேதாந்தா குழுமத்தின் கிளை நிறுவனமான இந்துஸ்தான் நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

அரிட்டாபட்டி கிராமத்தை 5000 ஏக்கர் (193.215 ஹெக்டேர்) பரப்பளவில் பல்லுயிர் பாரம்பரிய தலமாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த கிராமத்தைச் சுற்றி ஏழு சிறிய குன்றுகள் உள்ளன. 250 வகையான பறவைகளுக்கு வாழ்விடமாக இப்பகுதி உள்ளது. இந்த பகுதியில் 72 ஏரிகள், 200 இயற்கை நீரூற்று குளங்களும் உள்ளன. விவசாயத்தினை அடிப்படையான கொண்ட பகுதியாகவும் உள்ளது. மேற்கண்ட குளம், ஏரி மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயம் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத்தில் 16 பேரைச் சுட்டுக் கொள்வதற்குக் காரணமான வேதாந்தாவின் துணை நிறுவனத்திற்கு மீண்டும் மக்கள் வாழ்வாதாரங்களை அழிப்பதற்கான அனுமதியை ஒன்றிய பாஜக அரசு வழங்கியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக ரத்து செய்திடவும், மாநில அரசின் அனுமதியின்றி எந்த சுரங்க உரிமத்தையும் வழங்கக் கூடாது என்று ஒன்றிய அரசை வலியுறுத்தியும் டிசம்பர் 9 ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்ட தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள தீர்மானத்தை ஒன்றிய பாஜக அரசு ஏற்றுக்கொண்டு, உடனடியாக வேதாந்தா குழுமத்திற்கு வழங்கியுள்ள டங்ஸ்டன் கனிம வள சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை ரத்து செய்து, இத்திட்டத்தைக் கைவிட வலியுறுத்தி 2025 ஜனவரி 3 ஆம் தேதி காலை 10 மணிக்கு மதுரை மாவட்டம், மேலூர் பேருந்து நிலையம் அருகில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் எனது தலைமையில் அறப்போர் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

மதுரை மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், விவசாயிகள், மாணவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், வர்த்தகர்கள், அரசியல் கட்சியினர் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் கலந்து கொண்டு உரிமைக்குரல் எழுப்ப வாரீர் வாரீர் என்று தமிழ்நாட்டிற்கு ஊழியம் செய்பவன் என்ற முறையில் அழைப்பு விடுக்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

## நாகூர் ஹனிபாவின் நூற்றாண்டு பிறந்த நாள் உருவப்படத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை

சென்னை, டிச.26

தமிழக முதல்வர் ஸ்டாலின் இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனிபாவின் நூற்றாண்டு பிறந்த நாளையொட்டி, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், ஏ.ஐ தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட காலத்தால் அழியாத இசைமுரசு நாகூர் ஹனிபாவின் கம்பீரக்குரலுடன் கூடிய பாடல் குறுந்தகட்டினை வெளியிட்டார்.



இது குறித்து வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், “தமிழக முதல்வர் ஸ்டாலின் இன்று (25.12.2024) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள திமுக அலுவலகத்தில், இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனிபாவின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தியதோடு, தமிழ்நாட்டின் நல்லிணக்க வரலாற்றிற்குச் சான்றளிக்கும் விதமாக தயாரிக்கப் பட்டுள்ள “ஹபீபி” என்ற திரைப் படத்தில் Artificial Intelligence தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட காலத்தால் அழியாத இசைமுரசு நாகூர் ஹனிபாவின் கம்பீரக்குரலுடன் கூடிய பாடல் குறுந்தகட்டினை வெளியிட்டார்.

இயற்கையிலேயே இசை ஞானம் கொண்டிருந்த நாகூர் ஹனிபா தனது தனித்துவமான குரல் வளத்தாலும், பாடல் திறத்தாலும் உலகெங்கிலும் லட்சக்கணக்கான ரசிகர்களை பெற்றுள்ளார். நாகூர் ஹனிபா நூற்றுக்கணக்கான இஸ்லாமியப் பாடல்களையும், திராவிட இயக்கப்பாடல்கள் மற்றும் இதர பாடல்களையும் பாடி பெரும் புகழ்பெற்றவர். திமுகழகத் தோழர்களை தன் காந்தக் குரலில் கவர்ந்திழுத்த ‘அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா’, ‘கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே’, ‘ஒடி வருகிறான் உதயச்சூரியன்’ மற்றும் ‘இறைவனிடம் கையேந்துங்கள்’, ‘எல்லோரும் கொண்டாடுவோம்‘, ‘‘நட்ட நடு கடல் மீது’, ‘உன் மதமா என் மதமா’, போன்ற பாடல்கள் மிகப் பிரபலமானவை ஆகும்.

சுயமரியாதை இயக்கத் தொண்டராய், இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரராய் தம் அரசியல் வாழ்வைத் தொடங்கிய நாகூர் ஹனிபா, நீதிக்கட்சி, திராவிட இயக்கங்களின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். பட்டுக்கோட்டை அழகிரி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கண்ணியத் தலைவர் காயிதே மில்லத் ஆகியோரது அன்பையும் பெற்றவர். “இசை முரசு” நாகூர் ஹனிபா தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவராகவும் மக்கள் பணியாற்றியவர். நாகூர் ஹனிபா நிறைவான வாழ்க்கை வாழ்ந்து 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் நாள் மறைந்தார்.

தமிழ் இசைக்கும், திரை இசைக்கும் சுமார் 75 ஆண்டுகள் தொண்டாற்றிய நாகூர் ணி.வி. ஹனிபாவின் பங்களிப்பை போற்றி பெருமை சேர்க்கும் வகையில், நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு “இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனிபா தெரு” என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு “இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா” என்றும் பெயரிட்டு அழைக்க, முதல்வர் ஸ்டாலின் ஆணையிட்டு, அவரது புகழுக்கு பெருமை சேர்த்தார். அதற்காக நாகூர் ஹனிபாவின் குடும்பத்தினர் 21.12.2024 அன்று முதல்வரைச் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது, கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன், துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம்கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ., தலைமை நிலைய அலுவலகச் செயலாளர்கள் பூச்சி எஸ். முருகன், துறைமுகம் காஜா, கழக கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் இறையன்பன் குத்தூஸ் மற்றும் “ஹபீபி” என்ற திரைப்படத்தில் ஒரு பாடலுக்கு நடித்துள்ள திரைப்பட இயக்குநர் கஸ்தூரி ராஜா, இந்த ஹபீபி திரைப் படத்திற்கு பாடல்கள் எழுதிய கவிஞர் யுகபாரதி, தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி, இசையமைப்பாளர் சி.எஸ்.சாம், இயக்குநர் மீரா கதிரவன் ஆகியோர் உடனிருந்தனர். இவ் வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## “சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த மோடி அரசை கேட்கும் துணிவு அன்புமணிக்கு இருக்கிறதா?” அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கேள்வி

சென்னை, டிச.26

மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என மோடி அரசைக் கேட்கும் தைரியம் அன்புமணிக்கு இருக்கிறதா? என அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கேள்வி எழுப்பி உள்ளார்.



இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள் அறிக்கையில் கூறியுள்ளதாவது: ‘ஒவ்வொரு முறையும் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் வன்னிய சமூக மக்களை பகடைக்காயாக வைத்து, தனது கூட்டணி பேரத்தை வலுப்படுத்த பேரம் பேசி வரும் ராமதாசும், அன்புமணி ராமதாசும் தற்போது அடுத்த தேர்தலுக்கு ஆயத்தமாகிவிட்டார்கள். இதோ மறுபடியும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினை அரசியல் சூதில் பணயம் வைத்து, தனது அரசியல் பேரத்தை வலுப்படுத்த துடிக்கிறார்கள். ஆனால், அவர்களை நம்பி என்றும் ஏமாறப் போவதில்லை என்பதை கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே மக்கள் அவர்கள் முகத்தில் அடித்தாற்போல் தெரிவித்துவிட்டனர்.

எங்களது பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகனைக் குறிப்பிட்டு, வன்னியர் சமூக மக்கள் மீது தங்களுக்குப் பாசம் உள்ளது போல நீலிக்கண்ணீர் வடித்து நடித்திருக்கிறார் அன்புமணி ராமதாஸ். கூட்டணிக் கட்சியிடம் பிளஸ் 1 என்ற மாநிலங்களவை சீட் ஒப்பந்தம் போட்டு அந்த சீட்டை அன்புமணிக்கு மட்டுமே தாரை வார்ப்பார்கள். ஒன்றிய அமைச்சர் பதவி என்றாலும் அதனையும் தன் மகன் அன்புமணிக்குத்தான் வாங்கிக் கொடுப்பாரா ராமதாஸ்? இதுதான் ராமதாஸ் வன்னியர் பாசமா? என்று நாங்கள் கேட்க எவ்வளவு நேரம் ஆகும்?

பாமகவிற்காக அன்றுதொட்டு இன்றுவரை உழைத்து வரும் ஜி.கே.மணி, ஏ.கே.மூர்த்தி போன்ற எத்தனையோ மூத்த தலைவர்கள் இருந்தும் அன்புமணி ராமதாஸை அடுத்த தலைவராக்கியது எதனால்? தலைவர் பதவியில் இருந்த தீரன் எங்கே போனார்? ஜி.கே. மணி வகித்த தலைவர் பதவியை எதற்காக பிடுங்கி அன்புமணிக்கு கொடுத்தார்கள்? பாமகவில் வேறெவருமே அன்புமணி அளவிற்கு உழைக்கவில்லையா? என்று நாங்கள் கேட்க எவ்வளவு நேரம் ஆகும்? பாமகவிற்காக உழைத்து ஓடாய் தேய்ந்து உயிர்விட்ட காடுவெட்டி குருவைக் கூட இறுதி காலத்தில் கைவிட்ட உங்களுக்கு வன்னியர் பாசம் பற்றி எல்லாம் பேச தகுதி உண்டா? அவரது குடும்பத்தின் இன்றைய நிலை என்ன?

ஆகவே எதையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என முடிவு செய்யும் அரசல்ல இந்த திராவிட மாடல் அரசு. எதைச் செய்தாலும் அதில் யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணமும், அது யாராலும் நிராகரிக்க முடியாதவண்ணமும் அமைய வேண்டும் என்ற வகையில் கருணாநிதி காட்டிய வழியில் சரியான முடிவுகளை எடுத்து செயல்படுத்திவரும் அரசாகவே இருக்கிறது.

ஆனால் தற்போது பாமகவோ தங்கள் அரசியல் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு மிகவும் பிற்படுத்தபட்ட மக்களுக்கு துரோகத்தை மட்டுமே செய்து வருகிறது. நன்றாய் படித்து வேலைக்கு சென்று வாழ்வில் சிறந்த நிலையை அடையக்கூடிய வாய்ப்புள்ள இளைஞர்களை எல்லாம், பிஞ்சிலேயே சாதி வெறி பாய்ச்சி நன்றாய் செழித்து வளர வேண்டிய அந்த இளைஞர்களை வெறும் களைகளாய் மாற்றிக் கொண்டிருப்பதுதான் பாமகவின் சாதனை.

அன்புமணி ராமதாசுக்கு உண்மையிலேயே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மீது அக்கறை இருக்குமானால் அவர் கை குலுக்கி உறவாடி கூட்டணியில் இருக்கும் ஒன்றிய பாஜக அரசை பணியவைத்து, சாதி வாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த சொல்லுங்கள். ஆனால், அதற்கு தைரியம் வேண்டும். தைலாபுரம் பயிலரங்கத்தில் சொல்லி தர மாட்டார்களா? மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வேண்டும் என மோடி அரசை கேட்பீர்களா? அதை எல்லாம் நீங்கள் செய்ய மாட்டீர்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும்!’ இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

## நல்லகண்ணுவின் 100வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ள தொண்டர்களுக்கு முத்தரசன் அழைப்பு

சென்னை, டிச.26

தோழர் இரா.நல்லகண்ணு 100 வது பிறந்த நாளும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு தொடக்க விழாவும் நாளை (26.12.2024 வியாழன் காலை 9 மணியளவில்) கட்சியின் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் (செவாலியே சிவாஜி கணேசன் சாலை) மாநிலச் செயலாளர் தோழர் இரா.முத்தரசன் தலைமையில் நடைபெறுகின்றது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டிருக்கும் அறிக்கை விவரம்: ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில், ஸ்ரீவைகுந்தம் என்ற ஊரில், பெரும் விவசாயக் குடும்பத்தில் 1925 டிசம்பர் 26 ஆம் தேதி ராமசாமி கருப்பாயி தம்பதியருக்கு மூன்றாவது குழந்தையாக பிறந்தவர். இவரோடு பிறந்த சகோதரர்களும், சகோதரிகளும் சேர்ந்து பத்து பிள்ளைகள் கொண்ட பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

ஸ்ரீவைகுந்தத்தில் உள்ள காரனேஷன் உயர்நிலைப் பள்ளியில், பள்ளிக் கல்வி பயின்றவர். இவரது பள்ளி ஆசிரியரான பலவேசம் அவர்கள் மூலம் விவேகானந்தர், பாரதி, திரு.வி.க. போன்ற ஆளுமைகளையும், அவர்தம் படைப்புகளையும் அறிமுகம் செய்து வைத்தார். அத்துடன் கம்யூனிச சிந்தாந்தத்தையும் பயிற்றுவித்தார்.



இதன் விளைவாக 1943 ஆம் ஆண்டில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு அமைப்புரீதியாக செயல்படத் தொடங்கினார். அதில் இன்றுவரை சோர்வும், களைப்பும் இல்லாமல் மிகுந்த நம்பிக்கையோடு, 80 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இயங்கி வரும் பெருமைக்குரியவர்.

தோழர் இரா.நல்லகண்ணு பிறந்த நாளும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு தினமும் ஒரே நாளில் (26.12.1925) அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க சரித்திர சிறப்பாகும்.

இவ்விழாவில் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற இன்னாள் முன்னாள் உறுப்பினர்களும் கலந்து கொண்டு தோழர் இரா.நல்லகண்ணுவிற்கு வாழ்த்து கூற உள்ளனர்.

கட்சியின் நூற்றாண்டையொட்டி பாலன் இல்லத்தில் அமைந்துள்ள புதிய கொடி கம்பத்தில் இரா.நல்லகண்ணு கொடியேற்றி கட்சி நூற்றாண்டு விழாவை தொடக்கி வைக்கிறார். விழாவில் கட்சித் தோழர்களும், பொது மக்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மாலை தந்தி





திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடிதலைமையில் இன்று(24.12.2024) நடைபெற்றது. அருகில் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் (கூ.பொ.) ச.சுகுணா மற்றும் பலர் உள்ளனர்.

# அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சி முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி டிச26

கன்னியாகுமரியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகு மீனா, தலைமையில், நாகர் கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தர வதனம், ஆகியோர் முன்னிலை யில் அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சி முன்னேற் பாடு பணிகளை நேரில் பார்வை யிட்டு, ஆய்வு மேற்கொண்டு, தெரிவிக்கையில்:



தமிழ்நாடு முதலமைச்சர் முக்கடலும் சந்திக்கும் கன்னியா குமரிகடலில் அய்யன் திருவள்ளு வர் சிலை நிறுவி 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சி உலகத் தமிழர்கள் அனைவரும் கொண்டாடும் வகையில் கொண் டாட அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவிற்கான ஏற்பாடும் சிறப் பாக நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. இவ்விழாவானது உலகத்தமிழர்கள் அனைவர் களும் இணைந்து கொண்டாடும் வகையில் கன்னியாகுமரியில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச் சராக இருக்கும்பொழுது அய்யன் திருவள்ளுவரின் சிலையை கன்னியாகுமரி கடலின் நடுவே நிறுவினார்கள். சுனாமி ஆழிப்பேரலை மற்றும் பல்வேறு இன்னல்களையும் தாண்டி அய்யன் திருவள்ளுவர் சிலை எந்த ஒரு சேதாரம் ஏற்படாமல் கம்பீரமாக இன் றைக்கும் காட்சி தந்து கொண்டி ருக்கிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பய ணிகள் அதிகம் வரக்கூடிய தமிழ் நாட்டின் முக்கியமான சுற்றுலா தலம் கன்னியாகுமரி ஆகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வியந்து பார்க்கும் அளவில் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைக் கப்பட்டுள்ளது. அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா வருகின்ற டிசம்பர் 30, 31, ஜனவரி 1 ஆகிய மூன்று தினங்கள் மிகச் சிறப்பாக நடை பெற உள்ளது. விழா சிறப்பாக நடைபெறும் வகையில் மிக பிரம்மாண்டமான மேடை அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள் ளார்கள். இவ்விழாவில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் புகைப்பட கண் காட்சி, திருக்குறள் நூல்கள் அமைக்கப்பட்ட ஒரு கண்காட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதல மைச்சரால் திறந்து வைக்கப் பட உள்ளது. கன்னியா குமரி மாவட்ட ஆட்சியர் முன்னேற் பாடு பணிகளை முன் நின்று சிறப்பாக செய்து வருகிறார்கள். நெடுஞ்சாலை துறையின் சார்பில் கண்ணாடி பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சியை பொதுமக்களிடையே விழிப்பு ணர்வு ஏற்படுத்தும் வகையில் சென்னையில் துணை முதல மைச்சர் 10 பேருந்துகளில் அய்யன் திருவள்ளுவர் பற்றிய புகைப்படங்கள் ஒட்டிய பேருந் துகளை துவக்கி வைத் தார்கள். அதேபோன்று பெரிய பலூன் மாவட்டத்தின் தலை நகரத்தில் பறக்க விடப்பட உள்ளது. பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு கட்டுரை போட்டிகள், பேச்சு போட்டிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரி வித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஆட்சியர் .ஆர்.அழகு மீனா, தலைமையில், நாகர் கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தர வதனம், ஆகியோர் முன்னிலை யில் விழா நடைபெறும் அரங்கு மற்றும் மேடையினை பார்வை யிட்டார்கள். மேலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்பட கண்காட்சி அமைக்கப்படவுள்ள இடம், உலக புகழ் பெற்ற ஓவியக்கலை ஞரான திரு.சுதர்சன் பட்நாயக் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்படவுள்ள மாபெரும் திருவள்ளுவர் மணல் சிற்பம் அமைக்கப்படும் இடத் தினையும், நேரில் பார்வையிட்டு அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவு றுத்தினார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் நாகர்கோவில் வருவாய் கோட் டாட்சியர் செல்வி.காளீஸ்வரி, மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ் ராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெலன் டேவிட்சன், உதவி இயக்குநர் தமிழ் வளர்ச்சி கனகலெட்சுமி, மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலர் குழு தலைவர் (சுசீந்திரம்) பிரபா ஜி.ராம கிருஷ்ணன், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், கன்னியா குமரி துணை காவல் கண் காணிப்பாளர் மகேஷ், பூம்பு கார் கப்பல் போக்குவரத்து கழக துணை தலைவர் ஜெனஸ் மைக்கேல், வட்டார மருத்துவக்குழு உறுப்பினர் பாபு, வட்டார விவசாய குழு உறுப்பினர் தாமரைபாரதி, துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# காளையார்கோவிலில் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை முன்னிட்டு புத்தாடைகள் வழங்கும் விழா

காளையார் கோவில் டிச.26

சிவகங்கை மாவட்டம் காளை யார்கோவில் புனித அருளா னந்தர் ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை முன் னிட்டு புனித வின்சென்ட் தே பவுல் சபையின் புனித அருளா னந்தர் கிளைச் சபை சார்பாக ஏழை எளிய மக்களுக்கு புத்தா டைகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.




பங்குத்தந்தை சேசு உதவிப் பங்குத்தந்தை பாஸ்டின் பாரதி தலைமை வகித்தனர். கிளைச் செயலாளர் அன்பு நாதன் வரவேற்புரை ஆற்றி னார். கிளைத் தலைவர் ஆரோக்கியசாமி நோக்கவுரை யாற்றினார். சிவகங்கை மத்திய சபைத் தலைவர் பெர்னாட்ஷா சிறப்புரையாற்றினார்.

சிவகங்கை மத்திய சபைப் பொருளாளர் அமிர்தசாமி மத்திய சபைக் கல்வி திட்ட அலுவலர் சூசைராஜ் சூசையப் பர்பட்டணம் வட்டார சபைத் தலைவர் அருள் ஆண்டுச்சூரணி கிளைத் தலைவர் ஜான் அந்தோணி மேனாள் கிளைத் தலைவர் லூர்துராஜ் வாழ்த்து வழங்கினர். இயேசு கிறிஸ்துவின் பிறப்புச் செய்தி உலக மாந்தர் அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுத்தது. பகிர்வு நம் வாழ்வின் வேதனையை குறைத்து மகிழ்ச்சியை இரட்டிப் பாக்குகிறது.

மனிதத்தை நிறை வாக்கி தெய்வீகத்தை மலரச் செய்ய ஏழை எளிய மக்க ளுக்கு வின்செந்தியர்கள் புத்தா டைகளை வழங்கி மகிழ்ந்தனர். அனைவருக்கும் கிறிஸ்துமஸ் கேக் வழங்கி உணவு பரிமாறப் பட்டது. கிளைப் பொருளாளர் பால்ஜோசப் நன்றி கூறினார்.

துணைத் தலைவர் ஜோசப் உறுப்பினர்கள் அந்தோணி சாமி சகாயராஜ் ஆரோக் கிய லூயிஸ் லெவே டேனியல் ஜோசப் செல்வம் குழந்தை திரேஸ் கலந்து கொண்டு சிறப் பித்தார்கள்.

# தேனி மாவட்டம் டி.என்.பி.எஸ்.சி குரூப் IV தேர்விற்கு இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகள்

தேனி, டிச.26

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தேர்வு அட்டவணையின்படி தொகுதி IV இல் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட் டச்சர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர், வனக்காப்பாளர், வனக் காவலர் ஆகிய காலிப் பணியிடங்களுக்கு எழுத்து தேர்விற்கான அறிவிப்பு வரும் ஏப்ரல் 2025இல் வெளியிடப்பட உள்ளது.

இத்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் சிறந்த வல்லுனர்களைக் கொண்டு 30.12.2024 திங்கள் கிழமை



காலை 10 மணிக்கு துவங்கப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்பு நேரடி பயிற்சி வகுப்புகளாக நடைபெறும்.

இப்பயிற்சியின் போது ஒவ் வொரு பாடத்திற்கும் மாதிரி தேர்வுகள் நடத்தப்படும். மேலும், இலவச பாடக்குறிப்புகளும் வழங்கப்படும். 2023 2024ஆம் ஆண்டில் தொகுதி IV தேர்வில் இப்பயிற்சி மைய வகுப்பில் பயின்ற 17 மாணவர்கள் தேர்ச்சி பெற்று பல்வேறு அரசுத் துறை களில் பணியாற்றி வருகின்றனர்.

அவ்வாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி IV தேர்வுக்கு தயராகி கொண்டிருக்கும் தேர்வர்கள் இவ்வலுவலக நேரடி பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன் பெற லாம்.

இப்பயிற்சி வகுப்பில் சேரு வது தொடர்பாக தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர் களை நேரிலோ அல்லது 63792 68661 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். வி.ஷஜீவனா, தெவித்துள்ளார்.

# தேனியில் பாலின பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் தொடர்பான கூட்டம்

தேனி. டிச.26

தேனியில் பாலின பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் தொடர்பான கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடை பெற்றது.



தேனி மாவட்ட ஆட்சியர் அலு வலகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், தேசிய அளவிலான பாலின பாகுபாடு மற்றும் வன் முறைக்கு எதிரான விழிப்பு ணர்வு பிரச்சாரக் கூட்டம் மற்றும் மாவட்ட அளவில் பாலின பாகு பாடு மற்றும் வன்முறைக்கு எதிரான உறுதிமொழி மற்றும் மாபெரும் கையெழுத்து இயக்கம் மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமை யில் கடந்த (24.12.2024) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குழந்தை திருமணம், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் மது ஒழிப்பு (குடிப்பதை தடுத்தல்), குழந் தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், பெண் களுக்கு எதிரான குடும்ப வன்முறை, பெண் குழந்தை களின் பிறப்பு விகிதத்தை அதிகரித்தல் ஆகிய முக்கிய தலைப்புகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, பாலின பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சார உறுதிமொழியினை அனைத் துத் துறை அலுவலர்களும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், பாலின பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான மாபெரும் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்து, கையெ ழுத்திட்டார்.

முன்னதாக சுயஉதவிக்குழு உறுப்பினர்களால் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் பாலின பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு ரங்கோலி கோலம் போடப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளா தேவி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் ராஜ ராஜேஸ்வரி, மாவட்ட மாற்றுத் திற னாளி அலுவலர் காமாட்சி, மாவட்ட குழந்தைகள் பாது காப்பு அலுவலர் செல்வி சந் தியா, உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்). அறிவழகன் மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பி னர்கள் பலர் கலந்து கொண் டனர்.

# திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்குட்பட்ட ஊராட்சிகளில், 11 வளர்ச்சி திட்டப்பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தகவல்

சிவகங்கை டிச.26

சிவகங்கை மாவட்டம், திருப் பத்தூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட பகுதிகளில், இன் றையதினம் (24.12.2024) அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் முடிவுற்ற திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சரின் நல்லாட்சியில், பொதுமக்க ளுக்கு பயனுள்ள வகையிலான பல்வேறு திட்டங்கள் செயல் படுத்துவது மட்டுமன்றி, தமிழ கத்தின் அனைத்து பகுதிகளி லும் வளர்ச்சி பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், சிவகங்கை மாவட்டத்தின் கடைகோடி பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகள் அறிந்து அவர்க ளின் கோரிக்கைகளுக்கு முன்பாகவே, அரசின் பல்வேறு திட்டங்களின் கீழும் மக்கள் பிரதிநிதிகள் வாயிலாகவும் தொடர்ந்து பல்வேறு வளர்ச்சி பணிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், சிவ கங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற திட்டப் பணிகள் அனைத்தும் பொது மக்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டையிருப்பு ஊராட்சிக்குட்பட்ட காக்காளிப் பட்டி கிராமத்தில் குழந்தைகள் நேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.47.96 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள இரண்டு புதிய வகுப்பறை கட்டிடங்களும், திருவுடையார்பட்டி ஊராட்சிக் குட்பட்ட திருவுடையார்பட்டி கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 202122ன் கீழ் ரூ.07.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ள புதிய நியாய விலைக் கடையினையும், நெடுமறம் ஊராட்சிக்குட்பட்ட உடையநாத புரம் கிராமத்தில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 202324ன் கீழ் ரூ.07.00 இலட்சம் மதிப் பீட்டில் கட்டப்பட்டுள்ள பய ணியர் நிழற்குடையினையும், கண்டவராயன்பட்டி ஊராட்சிக் குட்பட்ட பையூர் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 202324ன் கீழ் ரூ.09.77 இலட்சம் மதிப் பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடையினை



யும், ஆ.தெக்கூர் ஊராட்சிக் குட்பட்ட வடக்கூர் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2024 25ன் கீழ் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி கட்டிடமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, தமிழகத் தில் ஒவ்வொரு ஊராட்சி அளவிலும், ஊராட்சி செயலகம் அமைப்பதற்கும் தமிழ் நாடு முதலமைச்சரால் அறிவுறுத் தப்பட்டுள்ளதன் அடிப்படை யில், 600க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சி செயலகம் தமிழகம் முழுவதும் அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதற்கான பணிகள் சிறப்பாக நடைபெற்று, பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட வையகளத்தூர் சுண்டக்காடு ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் 15 வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கிராம செயலக கட்டிடம் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இவ்வூராட்சி செயலகத்தில் கிராம நிர்வாக அலுவலகம், இணையதள சேவை, ஊராட்சி மன்றத்தலைவர்களுக்கான அறை, கூட்டரங்கம் மற்றும் அலுவலர்கள் பிரிவிற் கான தனி அறை ஆகியவை கள் தனித்தனியாக ஏற்படுத்தப் பட்டுள்ளது. பொதுமக்களுக்கு தேவையானவைகளை ஒரே இடத்தில் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதேபோன்று, இன்றைய தினம் குமாரபேட்டை ஊராட்சிக் குட்பட்ட சென்னல்குடி கிரா மத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 202425ன் கீழ் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடமும், வடக்கு இளையாத்தங்குடி ஊராட் சிக்குட்பட்ட கீரணிப்பட்டி கிரா மத்தில் திருப்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022 23ன் கீழ் ரூ.06.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையும், சேவினிபட்டி ஊராட்சிக்குட்பட்ட சேவினிபட்டி ஆதிதிராவிடர் காலனி பகுதியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 202223ன் கீழ் ரூ.08.50 இலட்சம் மதிப்பீட் டில் கட்டப்பட்டுள்ள நாடக மேடையும், ஆவிணிபட்டி ஊராட்சிக்குட்பட்ட ஆவிணிபட்டி ஐயப்பா நகர் பகுதியில் திருப் பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 202324ன் கீழ் ரூ.07.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையும்,

செவ்வூர் ஊராட்சிக்குட்பட்ட செவ்வூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 202122ன் கீழ் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடமும் என மொத்தம் ரூ.206.10 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், முடிவுற்ற 11 திட்ட பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக் கப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட ஊராட்சி பகுதிகளில் கூடுதல் தேவைகள் மற்றும் மேற் கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து, தற்போது ஊராட்சியின் சார்பில் கோரிக்கைகளும் வரபெற்றுள்ளன. அப்பணிகளை அரசின் பல்வேறு திட்டங்களின் கீழும், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினராகிய என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழும் அல்லது எனது சொந்த நிதியின் கீழும் மேற்கொள்வ தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுபோன்று பொதுமக்களின் தேவைகளை அறிந்து, அதில் தனிகவனம் செலுத்தி, தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் மூலம் பொது மக்களை பயன்பெறச் செய்தும், கிராமப்புறங்களின் மேம்பாட்டிற்கு அடித்தளமாக வும், பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி, பிற மாநிலங் களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறார் என கூட்டு றவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன் றியக்குழு தலைவர் சோ. சண்முகவடிவேல், இணை பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், உதவி பொறியாளர்கள் ராமசாமி, வீரப்பன், ராஜ்குமார், திருப்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இராஜேந்திர குமார், காதர் மொய்தீன், ஊராட்சி மன்றத்தலைவர்கள் எம்.சுசிலா (கோட்டை யிருப்பு), எஸ்.கண்ணன் (திரு வுடையார்பட்டி), மாணிக்க வாசகம் (நெடுமறம்), எஸ்.அபிராமிகாந்தி (கண்ட வராயன்பட்டி), ஜெயராணி (வையகளத்தூர் சுண்டக்காடு), தனலெட்சுமி (ஆ.தெக்கூர்), எம்.சத்தியவாணி (குமாரப் பேட்டை), சத்யா (வடக்கு இளை யாத்தங்குடி), சேவங்கொடி யோன் (சேவினிபட்டி), தையல் நாயகி (ஆவிணிபட்டி), அடை கப்பன் (செவ்வூர்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை மாவட்டம் பணியிலிருந்தபோது உயிரிழந்த இராணுவ வீரரின் உடலுக்கு ஆட்சித்தலைவர் அஞ்சலி



மதுரை, டிச.26

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா பேரையூர் வட்டம், எம்.கல்லுப் பட்டி கிராமத்திற்கு நேரடியாக சென்று, அசாம் மாநிலத்தில் ராணுவ முகாமில் பணியி லிருந்த போது நடந்த விபத் தில் உயிரிழந்த மதுரை மாவட் டத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் இன்பராஜ் அவர்களின் திருவுடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், எம்.கல்லுப்பட்டியை அருகேயுள்ள எம்.எஸ்.புரத்தைச் சேர்ந்தவர் இன்பராஜ். அசாம் மாநிலத்தில் உள்ள நிஹாம் பள்ளி முகாமில் இராணுவ வீரராக பணியாற்றி வந்தார். இந்நிலையில் கடந்த டிசம்பர் 22 அன்று இன்பராஜ் முகாமிற்கு உணவு எடுத்துச் செல்லும் போது, அவர் சென்ற இராணுவ வாகனம் பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் இன்பராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதனையடுத்து அன்னாரது உடல் அவரது சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள. சங்கீதா, அன்னாரது உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

## பாரதிய ஜனதா கட்சி சார்பில் அடல் பிகாரி வாஜ்பாயின் 100வது பிறந்த நாள் விழா



வேலூர், டிச.26

பாரதிய ஜனதா கட்சி சார்பில் அடல் பிகாரி வாஜ்பாயின் 100வது பிறந்த நாள் விழா அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

வேலூர் மாவட்டம், கே.வி. குப்பம் தாலுகா, லத்தேரி பேருந்து நிலையம் அருகில், பாரதிய ஜனதா கட்சியின் கிழக்கு ஒன்றியம் சார்பில் முன்னாள் பாரத பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் 100வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம், ஒன்றிய தலைவர் ஜெயபிரகாஷ் தலைமையில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி விமர்சையாக கொண் டாடப்பட்டது.

இதில் ஒன்றிய பொதுச் செய லாளர்கள் சங்கர், திருஞானம், பொருளாளர் வெங்கடேசன், மாவட்ட செயற்கு உறுப்பினர் தேவராஜ் மற்றும் துணைத் தலைவர்கள் நிர்வாகிகள் மற்றும் கிளைத் தலைவர்கள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ், குளம்- சிறுவர் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறப்பு





விழுப்புரம் டிச.26

விழுப்புரத்தில் வனத்துறை அமைச்சர் க.பொன்முடி மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, தலைமையில், விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் பேரூராட்சியில், அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ், அல்லாசாமி குளம் மற்றும் சிறுவர் பூங்கா வினை பொதுமக்கள் பயன்பாட் டிற்கு நேற்று (25.12.2024) திறந்து வைத்தார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச் சந்திரன், திருவெண்ணெய் நல்லூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் கு.ஓம் சிவசக்திவேல், திருவெண்ணெய்நல்லூர் பேரு ராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், உட்பட பலர் உள்ளனர்.

## பெரியகுளம் அருகே தேவதானபட்டியில் அமமுக சார்பில் எம்ஜிஆர் நினைவு நாள்



தேனி. டிச.26

தேனி மாவட்டம் பெரிய குளம் அருகே உள்ள தேவதானப் பட்டியில் முன்னாள் முதல மைச்சர் எம்.ஜி.ஆர் 37 வது நினைவு நாளை முன்னிட்டு அவருடைய திருவுருவசிலைக்கு அம்மா மக்கள் முன்னேற்ற கழக தெற்கு ஒன்றிய செயலாளர் குள்ளப்புரம் கணேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ராமசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தேனி வடக்கு மாவட்ட அவைத் தலை வர் ராஜேந்திரன், பேரூர் கழகச் செயலாளர் முத்துராஜ் ஒன்றிய மாணவர் அணி செயலாளர் பிரபு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு லிங்கேஸ்வரன், மாவட்ட பிரதிநிதி மாரியப்பன் ஒன்றிய அவைத்தலைவர் பாபு மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.




வேலூர் மாவட்டம், வேலூர் நகர் அரங்கம் அருகே, வேலூர் மாவட்டத்தில் ஆட்சி மொழி சட்ட வாரம் (18.12.2024 முதல் 27.12.2024 வரை) கொண்டாடப்படுவதை முன்னிட்டு சட்டவாரத்தில் 5ம் நாளான வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளை தமிழில் வைக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர், 2வது மண்டல குழு தலைவர் நரேந்திரன். தமிழ்வளர்ச்சி துறை துணை இயக்குநர் ஜெயஜோதி உட்பட பலர் உடனிருந்தனர்.

## சேலம் மாவட்டத்தில் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம் குறித்த மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக்கூட்டம்




சேலம், டிச.26

சேலம் மாவட்டத்தில் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம் குறித்த மாவட்ட அளவி லான கண்காணிப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் நடைபெற்றது.

சேலம் மாவட்ட ஆட்சிய ரகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம் குறித்த மாவட்ட அளவிலான கண் காணிப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் 24.12.2024 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகி றார்கள். அந்தவகையில் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் என்னும் தொலை நோக்குத் திட்டங்களை அறி வித்து செயல்படுத்தி வருகி றார்கள். இத்திட்டங்களை செயல் படுத்துவதன் மூலம் மாணவ, மாணவிகள் கல்லூரியில் அதிகளவில் சேர்க்கை நடை பெறுவதோடு, உயர்கல்வியில் மாணவர்களின் தேவைகளை அவர்களே பூர்த்தி செய்திட முடியும்.

தமிழ்நாட்டில் ஆரம்ப கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் கல்லூரிகளில் அதிகளவில் சேர்ந்து உயர்வதற்கு வழிவகை செய்யும். புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் அரசுப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்கள், அரசு உதவி பெறும் பள்ளியில் தமிழ் வழியில் 6 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்த மாண வர்கள் மற்றும் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் மூலம் தனியார் பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

சேலம் மாவட்டத்தில் புது மைப்பெண் திட்டத்தின் மூலம் தற்பொழுது வரை 21,151 மாண விகளும், அதேபோல் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் தற் பொழுது வரை 14,808 மாணவர் களும் என 35,959 மாணவ, மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர்.

தமிழ்நாட்டில் அனைத்து மாணாக்கர்களுக்கும் உயர் கல்வியை கட்டாயமாக கிடைக்கச் செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங் களில் தனி கவனம் செலுத்தி அலுவலர்கள் பணியாற்றிட வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் ரா. கார்த்திகா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் மு.கபீர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பி. செந்தில் குமார் உள்ளிட்ட தொடர் புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டத்தில் "டாம்ப்கால்" நடமாடும் சித்தா ஆயுர்வேதா யுனானி மருந்துகள் விற்பனை நிலையம் துவக்கம்



தென்காசி, டிச.26

தென்காசி மாவட்டத்தில் "டாம்ப்கால்" நடமாடும் சித்தா ஆயுர்வேதா யுனானி மருந்துகள் விற்பனை நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தென்காசி மாவட்டம் குற்றா லத்திற்கு வரும் சுற்றுலா பய ணிகள் பயன்படும் விதம் "டாம்ப்கால்" நடமாடும் சித்தா ஆயுர்வேதா யுனானி மருந்துகள் விற்பனை நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், கொடியசைத்து துவக்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது,

பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இந்த நடமாடும் டாப்க்கால் விற்பனை நிலையம் குற்றால அருவிகளின் அருகில் செயல் படும். இதனை பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ள லாம். மேலும், தரமற்ற, உரிமம் பெறப் படாத மருந்துகளை பொது மக்கள் வாங்க வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். மேலும் நடமாடும் டாப்க்கால் விற்பனை நிலையம் செயல்பாடு குறித்து பல சிறப்பு அறிவுரைகள் வழங்கினார்

இந்நிகழ்ச்சியில், ஆணையர் (இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி) விஜயலட்சுமி இ.ஆ.ப., மாவட்ட காவல் கண் காணிப்பாளர் சீனிவாசன், மாவட்ட சித்த மருத்துவ அலுவ லர் உஷா, மருத்துவர்கள் சதீஷ் குமார் ,மாரியப்பன், பாக்யஸ்ரீ, கிறிஸ்டி, மருந்தாளுநர்கள் நாகராஜன், உஷா, பயிற்சி மருத்துவர்கள் செல்வி.அனுபி ரியா, செல்வி.லோகமுத்ரா, மருத்துவமனை பணியாளர் கார்த்திக், மற்றும் அரசு அலுவலலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இராமநாதபுரம் மாவட்டத்தின் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்




இராமநாதபுரம், டிச.26

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மத்திய இரும்பு மற்றும் கனரக தொழில்துறை மத்திய இணை அமைச்சர் ஸ்ரீ பூபதி ராஜு ஸ்ரீனிவாச வர்மா மற்றும் தமிழ் நாடு பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமை யில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வீர் பிரதாப் சிங், ஆகியோர் முன்னிலையில் முன்னோடி மாவட்டமாக எதிர் நோக்கி வரும் இராமநாதபுரம் மாவட்டத்தின் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் மத்திய இரும்பு மற்றும் கனரக தொழில்துறை மத்திய இணை அமைச்சர் ஸ்ரீ பூபதி ராஜு ஸ்ரீனிவாச வர்மா இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு செய்து தெரிவிக்கையில்,

இந்தியாவில் 112 மாவட்டங் களை வளர்ச்சிக்கான எதிர் நோக்கு திட்டங்கள் செயல்படுத் துவதற்காக தேர்வு செய்யப் பட்டது. அதில் தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் விருதுநகர் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டு வளர்ச்சித் திட்டத்திற்கான பணிகள் ஒவ் வொரு துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு தனிமனித வளர்ச்சிக்கான திட்டங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் இராமநாத புரம் மாவட்டத்திற்கு வருகை தந்து மருச்சிக்கட்டி ஊராட்சி யில் காவிரி கூட்டுக் குடிநீர் திட் டப்பணிகள் ஆய்வு செய்யப்பட் டது. அதனைத்தொடர்ந்து பரமக்குடியில் வேளாண்மைத் துறையின் மூலம் விதை சுத்தி கரிப்பு நிலையம் கட்டிடம் கட்டுமானப்பணிகள் பார்வை யிடப்பட்டது. சத்திரக்குடியில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 15 வது நிதிக்குழு திட்டத்தில் செயல் படுத்தப்பட்டுவரும் திட்டப் பணிகள் பார்வையிடப்பட் டது. எட்டிவயல் ஊராட்சியில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் செயல்படுத் தப்பட்டுவரும் மிளகாய் குளிர் பதன கிட்டங்கி பார்வையிடப்பட் டது. பின்னர் முன்னாள் ஜனாதி பதி டாக்டர் .ஏ.பி.ஜே அப்துல் கலாம் படித்த இராமநாத புரம் ஸ்வாட்ஸ் மேல்நிலைப் பள்ளியை பார்வையிட்டு உட் கட்டமைப் புகள் மேம்படுத்து வதற்கு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து இராமேஸ்வரம் பாம்பன் புதிதாக கட்டப்பட்ட இரயில்வே மேம்பாலத்தை பார்வையிடப்பட்டது.

அதேபோல் இராமேஸ்வரம், தனுஷ்கோடி, தங்கச்சிமடம், உச்சிப்புளி, புதுமடம் உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டு வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக இராமநாதபுரம் மாவட்டத்தில் முக்கிய தேவையாக கருதக்கூடிய குடிநீர் திட்டப்பணிக்கு ஜல் ஜீவன் திட்டத்தின் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதுபோல் வேளாண்மைத் துறை, கூட்டுறவுத்துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ் சாலைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையின் மூலம் மேற்கொள் ளப்பட்டுவரும் திட்டங்கள் சிறப் பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இராமேஸ்வரம் சுற்றுலா தளமாக திகழ்ந்து வருவதால் மேலும் விரிவுபடுத் துவதற்கு தேவையான ஆலோ சனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மத்திய இரும்பு மற்றும் கனரக தொழில் துறை மத்திய இணை அமைச்சர் ஸ்ரீ புபதி ராஜு ஸ்ரீனிவாச வர்மா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இராமநாதபுரம் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.தர்மர் , பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் , மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு , பரமக் குடி சார் ஆட்சியர் செல்வி. அபிலாஷா கௌர் மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் வேலுச்சாமி மற்றும் அரசு அலு வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சுதந்திரம் அடைந்ததிலிருந்து பேருந்து வசதி இல்லாத கிராமத்திற்கு முதன் முதலாக பேருந்து வசதி

### ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்த மக்கள்



பரமக்குடி, டிச.26

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள ஏனாதி கோட்டை கிராமத்தில் நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் இதுவரை எவ்வித அரசு மற்றும் தனியார் பேருந்து போக்கு வரத்து வசதியும் இல்லை. ஆகை யால் கிராம மக்கள் பரமக்குடி அல்லது பார்த்திபனூருக்கு செல்வதற்கு ஊரில் இருந்து 5 கிலோ மீட்டர் நடந்து செல்லும் நிலை இருந்து வந்தது. இந் நிலையில் தங்கள் ஊருக்கு பேருந்து வசதி வேண்டி பரமக் குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசனிடம் கோரிக்கை விடுத்தனர்

அதன்படி எம்எல்ஏ வின் கோரிக்கையை ஏற்று இன்று ஏனாதி கோட்டையில் இருந்து பார்த்திபனூர் வழி யாக பரமக் குடிக்கு தினமும் இரண்டு முறை செல்லும் புதிய வழித்தடத்தில் புதிய பேருந்து சேவையை எம்.எல்.ஏ வைத்தார்

இதனையொட்டி ஏனாதி கோட்டை கிராம மக்கள் நீண்ட காலத்திற்கு பின் வந்த பேருந் துக்கு மாலை அணிவித்து, தேங்காய் உடைத்து, சந்தனம், குங்குமம் இட்டு, ஆரத்தி எடுத்து பூசணிக்காய் திருஷ்டி சுத்தி குலவை போட்டு வரவேற்று அந்த பேருந்தில் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்து பயணம் செய்து மகிழ்ந்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம் அடல்ஜி திடலில் மறைந்த முன்னாள் பாரத பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் 100வது பிறந்த நாள் விழா பாஜகவினரால் கொண்டாடப்பட்டது. இதையொட்டி அவரது உருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு இனிப்பு வழங்கப்பட்டது. மாவட்ட பாஜக தலைவர் சி.தர்மராஜ், பொதுச்செயலாளர் ஜெகந்நாதன், அகஸ்தீஸ்வரம் ஒன்றிய பார்வையாளர் சி.எஸ்.சுபாஷ், ஒன்றிய தலைவர்கள் பி.அருள்சிவா, அனுஜா சிவா, மாவட்ட தரவு மேலாண்மை பிரிவு செயலாளர் கிருஷ்ண ராஜ், கொட்டாரம் பேரூராட்சி கவுன்சிலர் தங்க குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## பெரியகுளம் அஇஅதிமுக சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் நினைவு தினம் அனுசரிப்பு

பெரியகுளம் டிச.26

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிறுவனரும், மறைந்த முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆர் 37 ஆம் ஆண்டின் நினைவுதின அனுசரிப்பு நிகழ்வு தேனி மாவட்டம் பெரியகுளம் அஇஅதிமுக சார்பில் நகர செயலாளர் பழனியப்பன் தலைமையில் எம்.ஜி.ஆரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து மௌன அஞ்சலி செலுத்தினர்.



இந்நிகழ்விற்கு பெரியகுளம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அன்ன பிரகாஷ், கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜகுரு, மாவட்ட துணைச் செயலாளர் முத்து லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர அவைத் தலைவர் கோம்பையன், நகர துணைச் செயலாளர் வெங்கடேசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சலீம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் துரைப்பாண்டி, மாவட்ட பிரதிநிதி சுரேஷ், விஜய் ஆனந்த் நகர எம் ஜி ஆர் மன்ற செயலாளர் கணேசன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, நகர ஒன்றிய பேரூர் கிளை நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் தொண்டர்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

## தரையிறங்குகையில் வெடித்துச் சிதறிய விமானம்... 42 பேர் பலி அதிர்ச்சி வீடியோ

அஜர்பைஜான், ஜன.26

அஜர்பைஜான் தலைநகரிலிருந்து ரஷ்யாவுக்குப் புறப்பட்ட பயணிகள் விமானம் கஜகஸ்தானில் அவசரமாகத் தரையிறங்குகையில் வெடித்துச் சிதறிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. முன்னதாக, அஜர்பைஜான் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் ஜே2 8243 விமானம், 67 பயணிகள் மற்றும் 5 விமான பணியாளர்கள் என 72 பேருடன் ரஷ்யாவின் க்ரோஸ்னி நோக்கிப் புறப்பட்டது. ஆனால், க்ரோஸ்னியில் நிலவிய கடும் பனிமூட்டம் காரணமாக விமானம் திருப்பிவிடப்பட்டது. இதனால், விமானத்தை அவசரமாக கஜகஸ்தானின் அக்தாவ் விமான நிலையத்தில் சூழல் ஏற்பட்டது.



அப்போது, சிறிது நேரம் வானில் வட்டமடித்தபடி இருந்த விமானம் அக்தாவ் விமான நிலையத்துக்கு 3 கி.மீ முன்பாகவே வேகமாகத் தரையிறங்குகையில் தீப்பிடித்து கடும் விபத்துக்குள்ளானது. அதைத் தொடர்ந்து, உடனடியாக விபத்து நடந்த பகுதிக்கு வந்த அவசர கால உதவி அதிகாரிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கஜகஸ்தானின் எமெர்ஜென்சி அமைச்சகத்தின் கூற்றுப்படி 42 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சுமார் 27 பேர் உயிர் பிழைத்ததாகவும், அவர்கள் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. இது தொடர்பாக அஜர்பைஜான் ஏர்லைன்ஸ் நிறுவனம், விமான விபத்துக்குள்ளான சம்பவத்தைக் குறிப்பிட்டு, கூடுதல் தகவல்கள் தெரிவிக்கப்படும் என இன்ஸ்டாகிராமில் பதிவிட்டிருக்கிறது.

மறுபக்கம், விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு உட்பட வேறு பிரச்னை ஏற்பட்டதா என்பது குறித்து அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## இளையான்குடியில் மின் வாரிய அஜாக்ரதையால் விபரீதம் ஒருவருக்கு கால் முறிவு

இளையான்குடி டிச.26

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலையம் அருகில் புறவழிச்சாலையில் மின் வாரியத்துக்கு சொந்தமான மின்கம்பங்கள் சாலை ஓரத்தில் பெருமளவில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. மக்கள் மற்றும் போக்குவரத்து அதிகமாக உள்ள இடத்தில்போதிய பாதுகாப்பு இன்றியும் எந்த நேரமும் சரிந்து விரும்படியாகவும் பெரிய அளவில் உள்ள மின் சும்பங்களை அடுக்கி வைத்துள்ளனர். இந்நிலையில் நேற்று 25.12.24 காலை 7.00 மணியளவில் கீழாயூர் காலனியைச் சேர்ந்த பாண்டி மகன் கண்ணன்(45) என்பவர் இயற்கை உபாதை கழிக்கசென்று திரும்பிவரும் போது ரோட்டில் வாகனங்கள் வந்ததால் மின் கம்பங்கள்



அடுக்கி வைத்துள்ள இடம் அருகே ஒதுங்கியபோது வாகனங்கள் சென்ற அதிர்வில் மின் கம்பங்கள சரிந்துள்ளன.

இதனல் அருகே ஒதுங்கிய கண்ணன், இடதுகால் மீது அடுக்கபட்டிருந்த மின் கம்பங்கள் சரிந்து விழுந்ததில் இடது கால் முறிந்து விட்டது. இவர் ஒரு கூலி தொழிலாளி ஆகும். மின் வாரிய கவனக் குறைவால் இன்நிகழ்வு நடந்துள்ளது. உடனே 108 க்கு பொது மக்கள் தெரிவிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப் பட்டார்.மின் வாரியம் பாதிக்கப் பட்ட தொழிலாளிக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் மின்கம்பங்களை மக்கள் நடாட்டம் இல்லாத வேறு பகுதிக்கு மாற்றவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பாபா மெட்ரிக் பள்ளியின் கிருஸ்துமஸ் கொண்டாட்டம்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி பாபா மெட்ரிக் பள்ளியில் கிறிஸ்மஸ் விழா மற்றும் ஆங்கிலப் புத்தாண்டு விழா கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. பள்ளி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன . மாணவர்கள் கிறிஸ்மஸ் தாத்தா மற்றும் ஏஞ்சல் வேடம் அணிந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பள்ளியில் பயிலும் அனைத்து குழந்தைகளுக்கும் புத்தாண்டு மற்றும் கிறிஸ்மஸ் வாழ்த்து மடல் வழங்கப்பட்டது. தாளாளர் கபிலன் நிர்வாகி மீனாட்சி மற்றும் முதல்வர் சாரதா ஆகியோர் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கியும் 2025 ஆம் ஆண்டு புத்தாண்டை வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

## எஸ். கர்ணா தலைமையில் உதயநிதியின் உதய நாள் விழா 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல் பொதுக்கூட்டம்

ஈஞ்சம்பாக்கம் டிச.26

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1000ற்கும் மேற்பட்டோருக்கு ஹாட் பாக்ஸ், புடவைகள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக்கூட்டம், 20.12.2024. வெள்ளிக்கிழமை மாலை 6:00 மணிக்கு, ஈஞ்சம்பாக்கம், பெத்தேல் நகர் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தெற்கு மாவட்ட 194 வது வட்டச செயலாளர் எஸ்.கர்ணா, மாமன்ற உறுப்பினர் விமலா கர்ணா தலைமை வகித்தார். பகுதி கழகச் செயலாளர், 15வது மண்டல குழு தலைவர், நீலாங்கரை வி. இ .மதியழகன் முன்னிலை வகித்தார். கழக நிர்வாகிகள்: தாஸ், ராஜா, தேவராஜ், சுரேஷ், குமார், இளையபெருமாள் முனுசாமி, பாலாஜி, ரேவதி, வால்டர், பிரபாகரன், பாலாஜி, தேவேந்திரன், தினேஷ், வெங்கடேஷ் ஆகியோர் வரவேற்றனர்.



இவ்விழாவில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர், மா .சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, தலைமைக் கழகப் பேச்சாளர் முகவைராமர், இளம் பேச்சாளர் ப.முத்துப் பாண்டி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் .தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் சிறப்புரையாற்றினார். விழாவில் மாவட்டத் துணைச் செயலாளர் மு. மனோகரன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் ஆ.அரிகிருஷ்ணன் உள்ளிட்ட 194வது வட்ட தி. மு.க.சோழிங்கநல்லூர் சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

## 195வது மாமன்ற உறுப்பினர் க.ஏகாம்பரம் தலைமையில் உதயநிதியின் பிறந்தநாள் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

சோழிங்கநல்லூர் டிச26

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 195 வது வட்டம், பல்லவன் குடியிருப்பு மேட்டுக்குப்பம், நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுக் கூட்டம் மாலை 6மணிக்கு 195 வது வட்ட மாமன்ற உறுப்பினர், வட்டக் கழகச் செயலாளர், நகர அமைப்பு நிலைக்குழு உறுப்பினருமான க.ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்ற விழாவில் சிறப்பு அழைப்பாளராக



தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுபிரமணியன் அவர்கள் திமுக அரசின் சாதனைகளை பற்றி மகளிடம் கேள்வி கேட்டு பதில் கூறியவர்களுக்கு பரிசுத் தொகை 1000 ரூபாய் வழங்கி பொது மக்களுக்கு விழிப்புணர்வு வேண்டும் என்பதற்காக தான் இது போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது என்று விழாவில் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஹாட் பாக்ஸ் 1000க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. விழாவில் சோழிங்கநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் வழக்கறிஞர். சிவசெயராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம். கே. ஏழுமலை, 15 ஆவது மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளருமான வி.இ.மதியழகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆ. அரிகிருஷ்ணன், கலைச்செல்வன், சந்திரபாபு, சம்பத்குமார், விஜயகுமார், ஆபு, விஜயா, ராஜன், ராஜகோபால், ராஜசுந்தரம், குட்டியப்பா, தேவராஜ், பி.ராஜா, இளம் பேச்சாளர் வெங்கடேசன், மாமன்ற உறுப்பினர் சங்கர் இறுதி நன்றி உரையாக கோபி

உள்ளிட்ட 195வது வட்ட தி.மு.க. சோழிங்கநல்லூர் சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

## அண்ணா பல்கலைகழகம்: கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான மாணவி கட்சித் தலைவர்கள் கண்டனம்

சென்னை, டிச.26

அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்து வரும் மாணவியும். நேற்று இரவு இருவரும் பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் ஒன்றாக அமர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த அடையாளம் தெரியாத இரண்டு பேர் மாணவனைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். பின்னர், மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் அதிர்ச்சியை மாணவரும் காதலித்து வந்ததாகக் கூறப்படுகிறது. ஏற்படுத்தியிருக்கிறது. இது குறித்து மாணவி கோட்டூர்புரம் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் இது தொடர்பாக, தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தன் எக்ஸ்பக்கத்தில், "சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி ஒருவர், இருவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. தலைநகரின் மையத்தில் அமைந்துள்ள தமிழ்நாட் டின் பெருமைமிகு அடையாளங்களில் ஒன்றான அண்ணா பல்கலைக்கழகத்திலேயே



மாணவிக்கு இப்படியொரு கொடூரம் நிகழ்ந்திருப்பது வெட்கக்கேடானது.

டெல்லியில் நிர்பயா சம்பவம் நடந்து 12 ஆண்டுகள் கழித்து, அதே போன்று ஒரு சம்பவம் தமிழ்நாட்டில் நடப்பது என்பது, சட்டம் ஒழுங்கை ஸ்டாலின் பின்நோக்கி தள்ளியிருப்பதையே காட்டுகிறது. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதை தொடர்ந்து நான் சுட்டிக்காட்டிய போதெல்லாம் அதனை எப்படி மறுப்பது என்பதில் மட்டுமே முனைப்பாக இருந்த ஸ்டாலின் மாடல் அரசு, எனது குற்றச்சாட்டின் தீவிரம் உணர்ந்து கொஞ்சமாவது செயல்பட்டிருந்தால், இதுபோன்ற பல சம்பவங்களை தடுத்திருக்கலாம்.

பெண்கள் படிப்பு மற்றும் பணியிடங்களில் கூட பாதுகாப்பாக இருக்க முடியாத அளவிற்கு சட்டம் ஒழுங்கை கெடுத்துள்ள விடியா தி.மு.க அரசுக்கு எனது கடும் கண்டனம் உடனடியாக குற்றவாளிகளை கைது செய்வதுடன், அவர்களுக்கு உச்சபட்ச சட்டப்பூர்வ தண்டனை கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்யுமாறும், மாநிலம் முழுவதும் பெண்கள் பாதுகாப்பிற்கான காவல் பணிகளை வலுப்படுத்துமாறும் ஸ்டாலினின் தி.மு.க அரசை வலியுறுத்துகிறேன்" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

அமுமுகவின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தன் எக்ஸ் பக்கத்தில் "சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவி ஒருவர் அடையாளம் தெரியாத சிலரால் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகியிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன.

இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக திகழும் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றிருக்கும் இந்த விரும்பத்தகாத சம்பவம் அப் பல்கலைக் கழகத்தில் பயிலும் ஒட்டுமொத்த மாணவிகளின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

மாநிலத்தின் தலைநகரில் உள்ள அண்ணா பல்கலைக் கழக வளாகத்திற்குள் மாணவிக்கு நடைபெற்றிருக்கும் இந்த சம்பவம், தமிழகத்தில் அனைத்து இடங்களிலுமே பெண்களுக்கு பாதுகாப்பில்லை என்பதையே மீண்டும் மீண்டும் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

எனவே, பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவியை பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, இனிவரும் காலங்களில் மாணவிகள் அனைவரும் பாதுகாப்பான சூழலில் கல்வி பயில்வதை உறுதி செய்ய வேண்டும் என அண்ணா பல்கலைக்கழக நிர்வாகத்தையும் தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்." எனப் பதிவிட்டிருக்கிறார். இந்த சம்பவம் தமிழகத் தில் அதிர்ச்சியை ஏற்படுத்தி யிருக்கிறது.

## பெருந்தமிழர் தியாகி முன்னாள் காவல்துறை அமைச்சர் கக்கன் நினைவேந்தல் நிகழ்ச்சி

தாம்பரம் டிச.26

பெருந்தமிழர் தியாகி முன்னாள் காவல்துறை அமைச்சர் கக்கன் ஜி அவர்களது நினைவேந்தல் நிகழ்ச்சி ஷத்திரிய பாசறை மற்றும் காமராஜர் நேதாஜி நல அறக்கட்டளையின் சார்பாக நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் ஷத்திரிய பாசறை மற்றும் காமராஜர் நேதாஜி நல அறக்கட்டளை நிறுவன தலைவர் ஆதித்யா சம்பத்குமார் அவர்கள் ஏற்பாட்டில் முன்னாள் காவல்துறை அமைச்சர் கக்கன் ஜி திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.



இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர காவல் பல்லாவரம் பகுதி போக்குவரத்து காவல் காமராஜர் நேதாஜி சமூக நல அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகர் சமூகப் நல மணிமாறன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல் துணை ஆய்வாளர் ஜெயவேல், போக்குவரத்து காவலர் சுதாகர், ஆயுதப்படை காவலர் காளிராஜ், தாம்பரம் மாநகர குரோம்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு காவலர் வசந்தகுமார், குற்றப்பிரிவு காவலர் சாமி கண்னு, ஊர்க் காவல் படை காவலர் குமுதா மற்றும் இளவரசி பொதுமக்கள் கலந்து கொண்டு கக்கன் ஜி திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161